2025 – அக்டோபர் மாதம் 09– ஆம் தேதி *வியாழக்கிழமை*
தலைமை நீதித்துறை நடுவர் நீதிமன்றம், பெரம்பலூர்.

*எம்.சி.ஓ.பி. நெம்பர் : 344/2023*

*2025–ம் ஆண்டு அக்டோபர் மாதம் 09– ஆம் தேதி வியாழக்கிழமை மனுதாரர்/எதிர்மனுதாரர் தரப்பு சாட்சியாகிய P W 1, வது நபரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டின் 54–வது விதியின் 9 –வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திருமதி. N. லலிதா,* Gr.II Bench Clerk *அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.*

| | | |
|---|---|---|
| பெயர் | : | P W 1, பெரியசாமி |
| தந்தையார் பெயர் | : | பிச்சைபிள்ளை |
| ஊர் | : | வி.களத்தூர் |
| வட்டம் | : | வேப்பந்தட்டை |
| மாவட்டம் | : | பெரம்பலூர் |
| தொழில் | : | ஓட்டுநர் |
| வயது | : | 46 |

**தேதி: 09.10.2025.**

**முதல் விசாரணை:–**

நான் இந்த மனுவில் மனுதாரர் ஆவேன். நான் எனது தரப்பில் ம.சா.1 ஆக இருந்து எனது நிரூபண வாக்குமூலத்தை தாக்கல் செய்கின்றேன். அதில் கண்டுள்ள சங்கதிகள் உண்மையானவை என்றும், அவை என்னால் சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு எனக்கு படித்து காண்பிக்கப்பட்டது என்றும், அவற்றை நான் சரியென்று ஒப்புக்கொண்டு அதில் கையெழுத்து செய்துள்ளேன் என்றும், பிரமாணத்தின் பேரில் உறுதியளிக்கின்றேன். என்னால் தாக்கல் செய்யப்படும் பின் வரும் ஆவணங்களை எனது தரப்பு சான்றாவணமாக குறியீடு செய்து கொள்ள வேண்டுமாய் பிரார்த்திக்கின்றேன்.

**எனது சார்பாக:–**

1). 17.08.2023–ம் தேதியன்று நடைபெற்ற விபத்து தொடர்பாக பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கையின் உண்மை நகலை தாக்கல் செய்கின்றேன். அது **ம.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகின்றது.

2). 17.08.2023–ம் தேதி முதல் 23.08.2023–ம் தேதி வரை நான் பெரம்பலூர் SPT மருத்துவமனையில் சிகிச்சை பெற்றதற்காக வழங்கப்பட்ட விடுவிப்பு அறிக்கையை தாக்கல் செய்கிறேன். அது **ம.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகின்றது.

3). மேற்படி SPT மருத்துவமனையில் சிகிச்சைக்காக செலுத்தப்பட்ட மருத்துவ கட்டண ரசீதுகள் (எண்ணிக்கை 58 ) தாக்கல் செய்கிறேன். அது **ம.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகின்றது.

4). எனது ஆதார் அட்டையின் அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்ட நகலைத் தாக்கல் செய்கிறேன். அது **ம.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**( மேற்படி ம.சா.ஆ.3 சான்றாவணம் 2–ம் எதிர்மனுதாரர் தரப்பு வழக்கறிஞரின் ஆட்சேபனைக்குட்பட்டு குறியீடு செய்யப்படுகிறது)**

மனுப்படி உத்தரவாக வேண்டுகின்றேன்.

<u>**2–ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை:–**</u>

நான் பத்தாம் வகுப்பு படித்துள்ளேன். மனுவை நான் படித்துப் பார்த்துதான் கையெழுத்து செய்தேன். நான் தாக்கல் செய்துள்ள மனுவில் நான் யாரிடம் வேலை பார்த்தேன் என்ற விவரம் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். மனுவில் நான் என்ன தொழில் செய்து வருகிறேன் என்ற விவரத்தையும் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். விபத்து சமயத்தில் நான் பயணம் செய்த வாகனம் 409 சரக்கு லாரி ஆகும். விபத்து சமயத்தில் மேற்படி வாகனத்தை நான் ஓட்டவில்லை. ஓட்டுநருடன் அமர்ந்து இருந்ததாகதான் எனது மனுவில் சொல்லியுள்ளேன். மேற்படி வாகனத்தை ஓட்டுவதற்கு கனரக ஓட்டுநர் உரிமம் வேண்டும் என்பது எனக்கு தெரியும். மேற்படி வாகனத்தை ஓட்டுவதற்கு உண்டான செல்லத்தக்க ஓட்டுநர் உரிமத்தை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். விபத்து குறித்து நான்தான் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். மேற்படி புகார் மனுவில் நான் யாரிடம் வேலை பார்த்தேன் என்றும் மேற்படி விபத்துக்குள்ளான வாகனம் யாருக்கு சொந்தமானது என்றும் குறிப்பிட்டு

சொல்லவில்லை என்றால் சரிதான். மேற்படி புகாரில் நான் மேற்படி 1—ஆம் எதிர்மனுதாரரின் வாகனத்தில் கூடுதல் ஓட்டுநர் என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். எங்களது வாகன உரிமையாளர் எங்களை திருச்சியிலிருந்து சென்னை வழியாக விசாகப்பட்டினத்திற்கு செல்ல அறிவுறுத்தியிருந்தார். விபத்து நடைபெற்ற இடம் திருச்சி — சென்னை தேசிய நெடுஞ்சாலையில் இல்லை என்றால் சரிதான். திருச்சி சென்னை நெடுஞ்சாலையில் பெரம்பலூர் பைபாஸில் பிரிந்து அரியலூர் செல்லும் சாலையில் பேரளி என்ற கிராமத்தில் விபத்து நடைபெற்றது என்றால் சரிதான். 1—ஆம் எதிர்மனுதாரரின் அறிவுறுத்தலை மீறி நானும் வாகன ஓட்டுநரும் எங்களது விருப்பதின் அடிப்படையில் அரியலூர் சென்ற போது விபத்து ஏற்பட்டுள்ளதால் மேற்படி விபத்திற்கான இழப்பீட்டிற்கு 2—ம்எதிர்மனுதாரர் பொறுப்பாளி இல்லை என்று சொன்னால் சரியல்ல. தொழிலாளர் இழப்பீட்டு சட்டத்தின் கீழ் நான் வேறு எங்கும் இழப்பீடு கோரவில்லை. 1—ம் எதிர்மனுதாரருக்கோ அல்லது 2—ம் எதிர்மனுதாரரான காப்பீட்டு நிறுவனத்திற்கோ தொழிலாளர் இழப்பீட்டு சட்டத்தின் கீழ் நான் அறிவிப்பு எதுவும் கொடுக்கவில்லை. நான் 1—ம் எதிர்மனுதாரர் வாகனத்தில் கூடுதல் ஓட்டுநராக பணிபுரிந்ததற்கு உண்டான ஆவணங்கள் எதுவும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 1—ம் எதிர்மனுதாரரிடம் ஓட்டுநராக பணிபுரிந்ததற்கு உண்டான நியமன ஆணை, வருகை பதிவேடு மற்றும் சம்பள சான்றிதழ் ஆகியவற்றில் எதையும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் 1—ம் எதிர்மனுதாரர் வாகனத்தில் ஏறி இறங்கும் அனுமதிக்கப்படாத பயணியாகதான் பயணம் செய்தேன் என்று சொன்னால் சரியல்ல.

என்னுடைய மனு சங்கதிகளின் அடிப்படையில் நான் 3—ம் தரப்பினர் இல்லை என்பதால் நான் கோரும் இழப்பீடு எனக்கு கிடைக்கத்தக்கது அல்ல என்று சொன்னால் சரியல்ல.

**(2—ம் எதிர்மனுதாரர் தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை பகுதியாக நிறுத்தி வைக்கப்படுகிறது)**

**ஒப்பம்/—கி.முரளிதரக்கண்ணன்,**
**தலைமை நீதித்துறை நடுவர்,**
**பெரம்பலூர்.**